ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2428/07 - 2025 මාර්තු මස 19 වැනි බදාදා - 2025.03.19

*2428/07 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு மாச்சு மாதம் 19 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## அரசாங்க அறிவித்தல்கள்

### *1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்கம் கொண்ட இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டம்*

*1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க மற்றும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கம் கொண்ட சட்டங்கள் மூலம் திருத்தி அமைக்கப்பட்ட 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு)ச் சட்டத்தின் உப பிரிவு 4(1) மற்றும் 14 ஆவது பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 20 ஆவது பிரிவினால் எனக்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரத்தின் கீழ் நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சராகிய அநுர குமார திசாநாயக்க ஆகிய என்னால் பின்வரும் விதிமுறைகள் ஒழுங்குபடுத்தப்படுகின்றன.*

**அநுர குமார திசாநாயக்க,**
நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார
அபிவிருத்தி அமைச்சர்.

நிதி, திட்டமிடல் மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சு,
கொழும்பு 01.
2025, மாச்சு19.

**ஒழுங்குவிதிகள்**

1. இவ் ஒழுங்குவிதிகள் **"2025 ஆம் ஆண்டின் 03 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள்"** என அழைக்கப்படும்.

2. 2013 ஏப்பிறல் 03 ஆம் திகதிய 1804/17 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2013 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகள் இத்தால் திருத்தம் செய்யப்படுகின்றன.



*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

3. மேலே குறிப்பிடப்பட்டுள்ள 2013 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளில் ஒழுங்குவிதி இலக்கம் 5,7 மற்றும் 8.1 (iv) என்பன இவ் ஒழுங்குவிதிகளின் மூலம் மாற்றீடு செய்து கீழே உள்ளவாறு வாசிக்கப்பட வேண்டும்.

"5. இரத்துச் செய்யப்பட்ட பதிவுச் சான்றிதழ் மற்றும் அதன் ஆங்கில மொழிபெயர்ப்பு மற்றும் ஒழுங்குவிதி 3(அ) அல்லது அதன் உறுதிப்படுத்தப்பட்ட பிரதியொன்று மற்றும் 3(ஆ) இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்களில், கடன் கடிதம் திறக்கப்பட்ட உள்ளூர் வங்கியின் மற்றும் ஏற்றுமதி செய்யும் நாட்டின் தொடர்புடைய வங்கியின் அதிகாரவபூர்வ முத்திரை இடப்பட்டிருத்தல் வேண்டும்.

எவ்வாறாயினும், மேலே குறிப்பிடப்பட்ட ஒழுங்குவிதி இலக்கம் (அ) மற்றும் (ஆ) இல் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்றுமதிச் சோதனைச் சான்றிதழ் (கப்பலேற்ற முன்னரான சோதனைச் சான்றிதழ்) மற்றும் உதிரிப்பாகப் பட்டியலை உள்ளடக்கிய வாகனத்தின் விரிவான தரச் சோதனை அறிக்கை கிடைக்கும் சந்தர்ப்பமொன்றில் உரிமம் பெற்ற வங்கியினால் அவ்வாறான ஆவணங்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளின் கீழ் விடுவிக்க வேண்டும் :

i. தொடர்புடைய வங்கியினால் ஆவணங்கள் நேரடியாக அனுப்பப்பட்டிருத்தல், மற்றும்

ii. உரிய சோதனை முகவர் நிறுவனத்தினால் இணையத்தினூடாக ஏற்றுமதிச் சோதனைச் சான்றிதழில் மற்றும் உதிரிப்பாகப் பட்டியலை உள்ளடக்கிய வாகனத்தின் விரிவான தரச் சோதனை அறிக்கையின் உண்மைத்தன்மையை சரிபார்த்து, அவ் ஆவணத்தில் "இவ் ஆவணத்தின் நம்பகத்தன்மை உறுதி செய்யப்பட்டுள்ளது" எனக் குறிப்பு இடப்பட்டிருத்தல்"

"7. நம்பகத்தன்மையை உறுதி செய்தல்

7.1 ஒழுங்குவிதி 3(அ) மற்றும் 3(ஆ) இல் குறிப்பிடப்பட்டுள்ள ஆவணங்கள் இதன் பின்னர் இலங்கை சுங்கத்திலிருந்து வாகனங்களை விடுவிப்பு செய்வதற்குரிய துணை ஆவணமாகக் கொள்ளப்படும்.

7.2 உரிய மோட்டார் வாகனத்தின் சுங்க விடுவிப்பிற்கு முன்னர், மேலே ஒழுங்குவிதி இலக்கம் 5 இன் படி உரிமம் பெற்ற வங்கியின் சான்றிதழுடன் கிடைக்கப் பெறும் ஆவணங்களின் நம்பகத்தன்மை, நிகழ்நிலை சரிபார்த்தல் முறையூடாக இலங்கை சுங்கப் பணிப்பாளர் நாயகத்தினால் மேலும் உறுதிப்படுத்தப்படல் வேண்டும்."

"8.1 (iv) அனைத்து நாடுகளிலிருந்தான இறக்குமதிகளுக்கு "பியுரோ வெரிடாஸ் பணியம் (Bureau Veritas) (மின்னஞ்சல்: itd.sgp@sg.Bureauveritas.com)"

4. இவ் ஒழுங்குவிதிகளின் நோக்கங்களை அடைந்து கொள்வதற்காக இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டாளர் நாயகத்தினால் சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு, உரிமம் பெற்ற வங்கிகளுக்கு மற்றும் வேறு தொடர்புடைய நிறுவனங்களுக்கு "செயற்பாட்டு ஆலோசனை" வழங்கப்பட வேண்டும்.

5. இவ் ஒழுங்குவிதிகள் 2025 மாச்சு மாதம் 19 ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும்.

6. ஏற்றுமதிச் சோதனைச் சான்றிதழ் வழங்கப்பட்ட தினம் எத்தினமாயினும், 2025 சனவரி 31 ஆம் திகதிய 2421/44 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்ட 2025 ஆம் ஆண்டின் 02 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) ஒழுங்குவிதிகளின் கீழான மோட்டார் வாகன இறக்குமதிகளுக்கும் இவ் ஒழுங்குவிதிகள் பொருந்தும்.

EOG 03 - 0250

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.